IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No.486/2013
DEPOSITION OF WITNESS

பி.வா.சா.3 சாட்சி பாலமுருகன் த.பெ.ஜெயமணி

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Principal District Munsif (FAC) on 26.02.2026 in accordance with the provisions of Act XX141.**

வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

1. நான் யாருக்காக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தாசில்தாருக்காக நான் சாட்சியம் அளிக்கிறேன். இந்த வழக்கில் தாசில்தார் பின்னிட்டு வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளார் என்றால் சரிதான். அரசு வழக்கறிஞர் என்னிடம் சொன்னார். இந்த வழக்கில் வாதி என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் மற்றும் 4ம் பிரதிவாதி எதிர் வழக்குரை தாக்கல் செய்துள்ள விபரம் தெரிந்துக்கொண்டேனா என்றால் தெரிந்துக்கொண்டேன். இந்த வழக்கில் தாசில்தார் தரப்பினராக சேர்ப்பதற்கு கடிதம் ஒன்று கொடுத்துள்ளார்கள் அது என்ன என்று தெரியுமா என்றால் தெரியாது.

2. மேற்படி ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் தெரியாது. பிரதிவாதி எதிர்வழக்குரையில் தாவா சொத்து சம்பந்தமாக இரு வேறு வழக்குகள் சமூகம் நீதிமன்றத்தில் நடைபெற்றுள்ளது என்பது தெரியுமா என்றால் தெரியாது. எனது அரசு வழக்கறிஞர் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை படித்து பார்த்து விபரம் சொன்னாரா என்றால் சொன்னார். எனது வழக்கறிஞர் இரு வேறு வழக்குகளை பற்றி என்னிடம் சொன்னாரா என்றால் தெரியாது. மேற்படி எதிர்வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள பழைய வழக்குகளின் நீதிமன்ற உத்தரவுகள்

இவ்வழக்கில் ஆவணங்களாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது அந்த விபரம் பற்றி அரசு வழக்கறிஞர் தெரியப்படுத்தினாரா என்றால் இல்லை.

3. இந்த எதிர்வழக்குரையில் அசல் வழக்கு எண். 96/2002 என்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டு அது 4ம் பிரதிவாதிக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனக்கு படிக்க தெரியும். பி.வா.சா.ஆ9 ல் வாதி பெயர் என்ன என்றால் பரமேஸ்வரி. மேற்படி என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் அரசு தரப்பில் யார் யார் உள்ளார்கள் என்றால் மதுரை மாவட்ட ஆட்சியர், திருமங்கலம் தாசில்தார், திருமங்கலம் நகராட்சி ஆணையர் மற்றும் 4ம் பிரதிவாதி பாண்டி ஆகியோர்கள் பெயரில் வழக்கு இருந்தது.

4. அசல் வழக்கு எண். 96/2002 வழக்கில் அரசுக்கு எதிராக தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி தீர்ப்பில் வாதி சொல்லியுள்ள சொத்து விபரத்தில் கிழமேல் அடியளவானது மேற்கு பக்கமும், கிழக்கு பக்கமும் 54 1/2 அடி என்று உள்ளது. அதேபோல் கிழமேல் 29 அதில் தெற்கு பக்கம் பாதையானது எத்தனை அடி காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் 7 அடி, மேற்படி 7 அடி சந்துதான் தாவா வழக்கில் பிரச்சனைக்குரிய சொத்து என்றால் சரிதான்.

5. அசல் வழக்கு எண். 96/2002 தீர்ப்பிற்கு எதிராக அரசு தரப்பில் இருந்து மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. இன்றைய தேதிவரை அசல் வழக்கு எண். 96/2002 ற்கு எதிராக மேல்முறையீடு எதுவும் நிலுவையில் இல்லை என்றால் சரிதான். தாவா சொத்து முத்தாலம்மன் கோவில் தெரு என்றால் சரிதான். தாவா சொத்து ஆதியில் ரயத்து புஞ்சை என்றால் சரிதான். மேற்படி தாவா சொத்தின் பழைய புல எண். 30/10 என்றால்

சரிதான். மேற்படி ரயத்து புஞ்சை என்பது தனி நபர் பட்டா நிலம் என்றால் சரிதான். மேற்படி பழைய புல எண். 30/10 ல் கட்டுப்பட்ட ரயத்து புஞ்சை நிலத்தைதான் 4ம் பிரதிவாதி கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான்.

6. பழைய புல எண். 30/10 ஆன தனிநபர் இடத்தில் அரசு பாதை அமைக்க வேண்டும் என்றால் என்ன வழிமுறைகளை கடைபிடிக்கவேண்டும் என்றால் அரசு விதிகளுக்கு கட்டுப்பட்டு அரசு ஆணை பிறப்பிக்கவேண்டும். மேற்படி அரசு ஆணை என்பது நிலத்தை கையகப்படுத்துவதற்கான வழிமுறைகள்தான் என்றால் சரிதான். மேற்படி பழைய புல எண். 30/10 ல் பாதை அமைக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளதா என்றால் அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. எந்த வருடம் பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் 2000ல் பிறப்பிக்கப்பட்டது. மேற்படி அரசு ஆணையை எனது தரப்பு அரசு வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை.

7. மேற்படி அரசு ஆணையை மேற்படி சமூக நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி அரசு ஆணையை பார்வையிட்டால் எவ்வளவு நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது எவ்வளவு தொகை வழங்கப்பட்டுள்ளது என்ற விபரம் தெரியவரும் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ6 ல் பிரதிவாதியான பரமேஸ்வரிக்கும் பாண்டி என்பவருக்கும் இடையே அசல் வழக்கு எண்.131/2000 என்ற வழக்கு நடைபெற்றது என்றால் சரிதான். மேற்படி வழக்கிலும் ஆணையரின் வரைபடம் ஒரு பகுதியாக கருதிக்கொள்ளவேண்டியது தீர்ப்பில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சொல்லப்பட்டுள்ளது. மேற்படி அசல் வழக்கில் உள்ள வரைபடமும் நீ.ம.சா.ஆ 2 ல் உள்ள வரைபடமும் ஒன்றாக உள்ளது என்றால் சரிதான். அசல் வழக்கு எண். 131/2000 ல் 4ம் பிரதிவாதி பாத்தியப்பட்ட இடத்திற்கு மேற்கு பக்கம்

முத்தாலம்மன் கோவில் உள்ளது என்றும் அந்த தெருவின் அத்து அசல் வழக்கு எண். 131/2000ல் தாக்கல் செய்யப்பட்டுள்ள வரைபடத்தின் அடிப்படையில் தெருவின் அத்து 4ம் பிரதிவாதி இடம் உள்ளது போல் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

8. மேற்படி இடத்தை சர்வேயர் அளந்து காண்பித்தார் என்றால் அது சர்வேயர் படம் அல்ல. நீதிமன்ற ஆணையாளர் வரைபடம் ஆகும். மேற்படி வரைபடத்திற்கும் தற்போது தாக்கல் செய்த வரைபடத்திற்கும் வேறுபாடு உள்ளது என்றால் ஆமாம். மேற்படி வேறுபாடு ஏற்பட்டதற்கு வரைபடத்தில் வேறுபாடு காட்டப்படுவதற்கு அரசு ஆணை எதுவும் உள்ளதா என்றால் டவுண் செட்டில்மெண்டு மட்டும்தான் உள்ளது. தாவா சொத்து பாதை என்பது 10 அடி பாதை கிடையாது என்றும் அரசு ஆவணம் தவறாக உள்ளது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி பாதை என்பது நகராட்சிக்கு பாத்தியப்பட்ட பாதையா அல்லது வருவாய்துறைக்கு பாத்தியப்பட்ட பாதையா என்றால் நகராட்சிக்கு பாத்தியப்பட்ட பாதை ஆகும்.

9. மேற்படி நகராட்சிக்கு பாத்தியப்பட்ட பாதைக்கும் வருவாய்துறையினருக்கும் சம்பந்தமில்லை என்றால் சரிதான். நான் தற்போது சாட்சியம் அளிப்பது நகராட்சிக்கு சாதகமாக அளிக்கிறேனா அல்லது வருவாய்துறைக்கு சாதகமாக அளிக்கிறேனா என்றால் இரண்டிற்கும் நான்தான் சாட்சியம் அளிக்கிறேன். நான் தற்போது தாசில்தாருக்கு மட்டும்தான் வருவதால் நகராட்சிக்கு சாட்சியம் அளிக்க முடியாது என்றால் சரிதான். வா.சா.ஆ. 19 ன் அடிப்படையில் தாவா தெரு என்பது அருந்ததியர் தெரு என்றால் சரிதான். மேற்படி அருந்ததியர் தெரு என்பது நீ.ம.சா.ஆ. 4 ல்

டவுண் சர்வே எண். 135 க்கு தெற்கில் குறுகலாகவும் சர்வே எண். 136 தெற்கில் விரிவடைந்தும் புலத்தில் டான வடிவில் உள்ளது என்றால் சரிதான்.

10. மேற்படி நகர்புற புல வரைபடம் என்பது தாவா சொத்தை பொறுத்து தவறாக போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி தாவா தெரு என்பது ரயத்து புஞ்சை என்பதால் வாதி மற்றும் 4ம் பிரதிவாதிக்கு 7 அடி பாதைதான் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதன் அடிப்படையில்தான் நிலம் கையகப்படுத்திருந்தாலும் 7 அடிதான் எடுத்திருக்கவேண்டும் என்றாலும் 10 அடி எடுத்திருப்பதாக கூறுவது தவறானது என்றால் சரியல்ல. நீ.ம.சா.ஆ4 ஆவணத்தில் வாதி மற்றும் 4ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டதாக கூறப்பட்டுள்ள அளவுகள் தவறானது என்றால் சரியல்ல. பத்திரத்தின் அடிப்படையில் 54 1/2 அடி அளவு இருக்கவேண்டும் என்றாலும் நீ.ம.சா.ஆ. 4 ஆவணத்தில் அவ்வாறு குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல.

11. வாதி தாக்கல் செய்த ஆவணம் வா.சா.ஆ. 2 ஆவணமானது 1984 ம் ஆண்டு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தின் அடிப்படையிலும் இந்த 4ம் பிரதிவாதி கிரைய பத்திரத்தின் அடிப்படையிலும் பாதையானது 7 அடி பாதைதான் என்றால் சரியல்ல. இந்த தாவா சொத்தை பொறுத்து வாதி எந்த ஆக்கிரமிப்பும் செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்படி பாதையை பொறுத்து அசல் வழக்கு எண். 96/2002 தீர்ப்பாணை நிலுவையில் உள்ளது என்றாலும் அதை மீறி 10 அடி பாதை போடமுடியாது என்றால் சரிதான். மேற்படி வழக்கில் 10 அடி பாதை என்பது தவறாக வழக்கு வரைப்பட்டிருக்கிறது என்றால் சரியல்ல. நான் நீதிமன்ற தீர்ப்புக்கு எதிராக சாட்சியம் அளிக்க முடியாது என்றால் சரிதான். வாதியின் வழக்கு தள்ளுபடி செய்யபடவேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை

தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி

அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்

கையொப்பமிட்டார்.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.02.26 11:36:06 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),

திருமங்கலம்.